சாத்தியமில்லையென்றால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தினை உரிமையாளர்களிடமே இழப்பீட்டுடன் திரும்பக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு தொழில் துறை அமைசசர் ஆகியோரிடம் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

(எ) தாம்பரம் தொகுதி, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள். சுருக்கமாகக் கேளுங்கள். இல்லையெனில் நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க நேரிடும்.

***திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்மல், நாகல்கேணி, பொழிச்சலூர், திருநீர்மலைப் பகுதிகளில் 200–க்கும் மேற்பட்ட சாயப் பட்டறைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றின் கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப்படுவதால், கால்வாய் வழியாகச் சென்று, மணப்பாக்கம் check dam–ல் தேங்குவதால், முகலிவாக்கம், மணப்பாக்கம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கிராமங்களின் நிலத்தடி நீர் கெட்டுப் போகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(ஏ) நெய்வேலி அனல் மின் நிலையம், ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி NLC India நிறுவனத்தில் பணியாற்றுகிற 9,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள், 26 பணி நாட்கள் வேலை கேட்டு, கடந்த 8 நாட்களாக போராடி வருகின்றார்கள். போராடி வருகின்ற தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுகின்றவகையில், அவர்களுடைய கோரிக்கையைப்